# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1659/1 - 2010 ජූනි 21 වැනි සඳුදා - 2010.06.21

*1659/1 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட விடயத்துடன் தொடர்பான 1645/20 கொண்ட அதி விசேட வர்த்தமானப் பத்திரத்தின் 03, 04 ஆகிய பந்திகளைப் பின்வரும் விதமாக திருத்தியமைக்கின்றேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010.07.26 ஆந் திகதி தொடக்கம் 2010.07.31 ஆந் திகதி வரை மு. ப.10.00 மணி தொடக்கம் பி.ப. 3.30 வரையான காலப் பிரிவிற்குள் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010.07.15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கனேச அமரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
ஹம்பாந்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹம்பாந்தோட்டை,
2010.06.15.

07 - 188